AL/2021(2022)/42/T-I

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2021 (2022)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2021 (2022)
General Certificate of Education (Adv. Level) Examination, 2021 (2022)

හින්දු ධර්මය I
இந்து சமயம் I
Hinduism I

42 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

**அறிவுறுத்தல்கள்:**

* **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
* விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
* விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
* **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய விடைத்தாளில் புள்ளடி** (X) இடுவதன் மூலம் காட்டுக.

---

● **1** தொடக்கம் **5** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் **ஐந்து** விடயங்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **ஒன்று** ஏதோவொரு காரணத்தினால் ஏனையவற்றுடன் பொருந்தாது. **பொருந்தாததைத்** தெரிவு செய்க.

**1.** (1) சுருதி (2) அபௌருஷேயம் (3) ஆம்நாயம் (4) சுயம்பு (5) பாஞ்சராத்திரம்

**2.** (1) பட்டினத்தடிகள் (2) பத்திரகிரியார் (3) குதம்பைச் சித்தர் (4) யோகர் சுவாமிகள் (5) கடுவெளிச் சித்தர்

**3.** (1) சரியாபாதம் (2) பிராயச்சித்தவிதி (3) சிவலிங்க இலக்கணம் (4) பவித்திரவிதி (5) அட்டமாசித்தி

**4.** (1) காளத்தி புராணம் (2) கரிகரர் (3) விருபாட்ஷர் கோயில் (4) திருக்கைலாய ஞானஉலா (5) கிருஷ்ணதேவராயர்

**5.** (1) ஆகமப்பிரியன் (2) சங்கீரணஜாதி (3) குணபரன் (4) விசித்திரசித்தன் (5) மத்தவிலாசன்

● **6** தொடக்கம் **10** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் **ஐந்து சோடிச் சொற்கள்** தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சோடியிலுள்ளவை ஒன்றுடன் ஒன்று பொருந்தவில்லை. **பொருந்தாத** அச்சோடிச் சொற்களைத் தெரிவுசெய்க.

**6.** (1) கரகம் - அம்மன்
(2) காவடி - முருகன்
(3) கோலாட்டம் - கண்ணன்
(4) கம்சன் வதம் - சிவன்
(5) காமன் கூத்து - மன்மதன்

**7.** (1) விவேகானந்த சபை - கொழும்பு
(2) இராமகிருஷ்ண மிஷன் - மட்டக்களப்பு
(3) சைவபரிபாலன சபை - திருகோணமலை
(4) அகில இலங்கை இந்துமாமன்றம் - கொழும்பு
(5) சைவவித்தியா விருத்திச் சங்கம் - யாழ்ப்பாணம்

[பக். 2 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka

8. (1) நவநாத சித்தர் - வைகுந்த சுவாமிகள்
(2) செல்லப்பா சுவாமிகள் - யோகர் சுவாமிகள்
(3) வைரமுத்துச் செட்டியார் - கடையிற் சுவாமிகள்
(4) குழந்தைவேல் சுவாமிகள் - மகாதேவ சுவாமிகள்
(5) சித்தானைக்குட்டி சுவாமிகள் - பெரியானைக்குட்டி சுவாமிகள்

9. (1) கணபதி - கணங்களின் தலைவர்
(2) லம்போதரர் - தும்பிக்கை உடையவர்
(3) பிள்ளையார் - பிள்ளைகளுக்குரிய கடவுள்
(4) விநாயகர் - தனக்கு மேல் தலைவர் இல்லாதவர்
(5) கணேசன் - மனம், வாக்குக்கும், அவற்றைக் கடந்த நிலைக்கும் உரியவர்

10. (1) தர்மம் சர - தர்ம வழியில் நட
(2) ஸத்யம் வத - உண்மை பேசுக
(3) மாத்ரு தேவோ பவ - தந்தையைத் தெய்வமாகப் போற்றுக
(4) ஆச்சார்ய தேவோ பவ - குருவைத் தெய்வமாகப் போற்றுக
(5) அதிதி தேவோ பவ - விருந்தினரைத் தெய்வமாகப் போற்றுக

- **11** தொடக்கம் **15** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் **அ, ஆ** என்னும் நிரல்களின் கீழ் சில விடயங்கள் தரப்பட்டுள்ளன. **'அ'** நிரலுக்கு ஏற்ற விதத்தில் **'ஆ'** நிரலில் உள்ள விடயங்கள் பொருத்தமாக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள சேர்மானத்தைத் தெரிவு செய்க.

**11.**

| அ | ஆ |
|---|---|
| (i) யசுர் வேதம் | A - ஆரியபட்டர் |
| (ii) வானியல் | B - சதருத்திரியம் |
| (iii) தர்மசாஸ்திரங்கள் | C - தன்வந்திரி |
| (iv) அதர்வண வேதம் | D - யுகதர்மம் |
| (v) மருத்துவம் | E - ஸ்திரிகர்மாணி |

(1) B A D C E (2) B A D E C (3) D C E A B (4) E A D B C (5) E C D B A

**12.**

| அ | ஆ |
|---|---|
| (i) திருவிருத்தம் | A - வாசியோகம் |
| (ii) சித்தர்கள் | B - நம்மாழ்வார் |
| (iii) கணபதீஸ்வரம் | C - நம்பியாண்டார் நம்பி |
| (iv) ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி | D - ஏரம்ப உபநிடதம் |
| (v) காணாபத்தியம் | E - திருஞானசம்பந்தர் |

(1) B A C E D (2) B A E C D (3) C A B E D (4) C A E B D (5) E A B C D

**13.**

| அ | ஆ |
|---|---|
| (i) இருமைவாதம் | A - கபிலர் |
| (ii) புருடன் | B - சாங்கியம் |
| (iii) சாங்கிய சூத்திரம் | C - பிரகிருதி |
| (iv) கேவலம் | D - போக்தா |
| (v) கருத்தா | E - தனித்திருத்தல் |

(1) B D A E C (2) B E A D C (3) C B A D E (4) C B D A E (5) C D B A E

**14.**

| அ | ஆ |
|---|---|
| (i) ஆவுடையார் | A - வித்தை |
| (ii) குரு | B - இலிங்காயதர் |
| (iii) இலிங்கம் | C - ஒடுக்கம் |
| (iv) வீரசைவர் | D - சிவனடியார் கூட்டம் |
| (v) சங்கமம் | E - சக்தி |

(1) A D B E C (2) A E D C B (3) B C D E A (4) D A E C B (5) E A C B D

[பக். 3 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka

| | அ | | ஆ |
|---|---|---|---|
| **15.** | (i) அனுராதபுரக் காலம் | A | - ஆறுமுகநாவலர் |
| | (ii) பொலநறுவைக் காலம் | B | - சம்பந்தர் |
| | (iii) யாழ்ப்பாண இராச்சிய காலம் | C | - சதுர்வேதி மங்கலம் |
| | (iv) ஒல்லாந்தர் காலம் | D | - திருக்கரசைப் புராணம் |
| | (v) ஆங்கிலேயர் காலம் | E | - பறாளை விநாயகர் பள்ளு |

(1) B C A D E (2) B C D E A (3) C B E A D (4) D A B C E (5) E C D A B

● **16** தொடக்கம் **30** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் அதன் கீழே தரப்பட்டுள்ளவற்றுள் மிகப்பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

**16.** "பல்கலை ஆகம வேதம் யாவையினும் கருத்து பதிபசுபாசந் தெரிதல்" எனக் கூறும் சித்தாந்த சாஸ்திர நூல்
(1) திருவருட்பயன் (2) சிவப்பிரகாசம் (3) சிவஞானபோதம்
(4) இருபா இருப·்து (5) உண்மை விளக்கம்

**17.** நடராஜ மூர்த்தத்தில் சடாமுடி எதனைக் குறித்து நிற்கிறது?
(1) பேரழகு (2) ஞானம் (3) திசை (4) பேராற்றல் (5) சக்தி

**18.** கண்ணகி தெய்வத்துக்கு கி.பி. 2ஆம் நூற்றாண்டில் விழா எடுப்பித்தவன்
(1) கஜபாகு மன்னன் (2) கோவலன் (3) மாறவர்மன்
(4) பாண்டிய மன்னன் (5) சேரன் செங்குட்டுவன்

**19.** "நூன் முறை தெரிந்து சீலத்து ஒழுகு" எனக் குறிப்பிட்டவர்
(1) ஔவையார் (2) திருவள்ளுவர் (3) திருமூலர்
(4) பாரதியார் (5) குமரகுருபரர்

**20.** மாண்டுக்கிய காரிகையின் மூலம் வெளிப்படுத்தப்படும் தத்துவக் கொள்கை
(1) விசிட்டாத்வைதம் (2) அத்வைதம் (3) சைவசித்தாந்தம்
(4) சாங்கியம் (5) துவைதம்

**21.** கணபதியின் பிறப்பு பற்றிக் கூறுவது
(1) கருட புராணம் (2) முக்கல புராணம் (3) பவிஷ்ய புராணம்
(4) பிரம புராணம் (5) ஆக்னேய புராணம்

**22.** பிதாமஹக் கோட்பாடு என்பது,
(1) அறக்கோட்பாடு ஆகும்.
(2) கடவுட்கோட்பாடு ஆகும்.
(3) வானியற்கோட்பாடு ஆகும்.
(4) புருடார்த்தக்கோட்பாடு ஆகும்.
(5) பிரபஞ்சத் தோற்றம் பற்றிய கோட்பாடு ஆகும்.

**23.** 'தீவினை விட்டீட்டல் பொருள்' என்பது
(1) கொடை செய்து பொருளீட்டுதல்
(2) நல்வழியில் பொருள் சேகரித்தல்
(3) தீவினைகளூடாகப் பொருள் சேகரித்தல்
(4) பொருளின் தேடல் தீவினைகளில் தங்கியிருத்தல்
(5) அறத்தின் அடிப்படையில் தீவினை விடுத்துப் பொருளீட்டுதல்

**24.** சாங்கியத்துக்கும் யோகத்துக்கும் இடையிலுள்ள மிகப்பெரிய வேறுபாடு
(1) ஈஸ்வர தத்துவத்தை ஏற்றுக்கொள்ளல்
(2) கைவல்ய நிலையை எடுத்துக்கூறுதல்
(3) பிரகிருதியை கருத்தாவாக வலியுறுத்துதல்
(4) பிரகிருதி பரிணாமத்தை ஏற்றுக்கொள்ளுதல்
(5) போகங்களை அனுபவிக்கும் பொருளாக புருடன் விளங்குதல்

[பக். 4 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka ,
Department of Examinations Sri Lanka ,

25. தன்னைவிடப் பிறர் ஒவ்வார் எனக் கருதும் நிலையில் ஆணவத்தின் குணம்
(1) விகற்பம் (2) மோகம் (3) கற்பம் (4) அஞர் (5) குரோதம்

26. வைணவ மரபில் காதலன் - காதலிக்கு இடையிலான உறவுமுறையாக அமைவது
(1) தாஸ்யபாவம் (2) மதுரபாவம் (3) சகியபாவம்
(4) காந்தபாவம் (5) வாத்சல்யபாவம்

27. சோழர் காலத்தில் தஞ்சையில் சுந்தரசோழன் நினைவாக மருந்தகம் ஒன்றினை அமைத்தவர்
(1) ராஜராஜன் (2) கரிகாலன் (3) குந்தவை
(4) ராஜேந்திரன் (5) இரண்டாம் குலோத்துங்கன்

28. பஞ்சயக்ஞங்களுள் அடங்குவன
(1) பிதிர்யக்ஞம், தேவயக்ஞம், பிரமயக்ஞம்
(2) பிதிர்யக்ஞம், மானுடயக்ஞம், சிவயக்ஞம்
(3) பூதயக்ஞம், வேள்வியக்ஞம், ஞானயக்ஞம்
(4) பிரமயக்ஞம், பிதிர்யக்ஞம், இல்லறயக்ஞம்
(5) பிதிர்யக்ஞம், இல்லறயக்ஞம், தேவயக்ஞம்

29. இந்துக்களால் கொண்டாடப்படும் பண்டிகைகளை மாத்திரம் உள்ளடக்கிய தொகுதியைத் தெரிவு செய்க.
(1) தைப்பொங்கல், கந்தசஷ்டி, தீபாவளி
(2) கந்தசஷ்டி, திருக்கார்த்திகை, நவராத்திரி
(3) போகிப்பண்டிகை, திருக்கார்த்திகை, தீபாவளி
(4) தீபாவளி, சித்திரை வருடப்பிறப்பு, தைப்பொங்கல்
(5) தீபாவளி, மார்கழித் திருவாதிரை, சித்திரை வருடப்பிறப்பு

30. பல்லவர் கால சிற்பக்கலையுடன் தொடர்புடைய தொகுதியைத் தெரிவு செய்க.
(1) தர்மராஜரதம், பிடாரிரதம், சித்தன்னவாசல்
(2) காஞ்சி கைலாசநாதர் கோயில், சித்தன்னவாசல், எல்லோரா
(3) தர்மராஜரதம், பிடாரிரதம், மாமல்லபுரம் கடற்கரைக் கோயில்
(4) தர்மராஜரதம், காஞ்சி கைலாசநாதர் கோயில், சித்தன்னவாசல்
(5) காஞ்சி கைலாசநாதர் கோயில், மாமல்லபுரம் கடற்கரைக் கோயில், எல்லோரா

- **31** தொடக்கம் **35** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் உரிய தலைப்புடன் **பொருந்தாததைத்** தெரிவுசெய்க.

31. **இராமாயணம்**
(1) வைஷ்ணவ சமயம் சார்ந்தது.
(2) ஏழு காண்டங்களைக் கொண்டது.
(3) மனித தர்மத்தை வலியுறுத்துகிறது.
(4) இராமரை அவதார புருஷராகக் கூறுகிறது.
(5) தமிழ் மொழியில் துளசிதாசரால் பாடப்பட்டது.

32. **வழிபாட்டில் மருத்துவம்**
(1) ஆலயத்தை வலம் வருதல்
(2) தோப்புக்கரணம் (தோர்பிக்கரணம்) போடுதல்
(3) பஞ்சாங்க, அட்டாங்க நமஸ்காரங்கள் செய்தல்
(4) நந்தவனத்தில் மூலிகைச் செடிகளை வளர்த்தல்
(5) பல்லவ மன்னர்களால் மருத்துவர்களுக்கு மானியம் வழங்கப்பட்டமை

33. **இந்துசமயம்**
(1) பரந்த நோக்குடையது.
(2) பழைமை வாய்ந்த சமயமாகும்.
(3) தனியொருவரால் தோற்றுவிக்கப்பட்டது.
(4) மனிதன் வாழ்வாங்கு வாழ வழிகாட்டுகிறது.
(5) பல்வேறு வகையான வழிபாட்டு முறைகளைக் கொண்டது.

[பக். 5 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka
Department of Examinations Sri Lanka

**34. சிந்துவெளியில் சைவம்**

(1) நடனமாது வடிவம் நடராஜர் வடிவத்தை ஒத்தது.
(2) திமில்பருத்த எருது வடிவங்கள் நந்தியை நினைவூட்டுகின்றன.
(3) கிடைக்கப்பெற்ற கூம்புருவக் கற்கள் இலிங்க வடிவத்தைச் சுட்டுவன.
(4) கருவுயிர்க்கும் பெண் வடிவம் அர்த்தநாரி வடிவத்தை நினைவூட்டுகின்றது.
(5) யோகியும் புடைசூழ்ந்துள்ள மிருகங்களும் பசுபதி வடிவத்தை நினைவூட்டுகின்றன.

**35. தைப்பொங்கல் திருநாள்**

(1) சூரியன் மகர ராசியில் இருந்து தனுசு ராசிக்குச் செல்லும் நாளாகும்.
(2) புதுப்பானையில் புது அரிசியிட்டுப் பொங்குவர்.
(3) சூரிய பகவானுக்கு நன்றி செலுத்தும் நாளாகும்.
(4) வீட்டு முற்றத்தில் கொண்டாடப்படும்.
(5) அறுவடைத் திருநாளாகும்.

- மேல்வரும் பகுதியில் A தொடக்கம் J வரையில் தரப்பட்டுள்ள சொற்களுள் இவ்விரண்டு சொற்கள் குறிப்பிட்டவொரு விடயத்தோடு தொடர்புடையவை. அவற்றின் பொருத்தப்பாட்டின் அடிப்படையில் **36** தொடக்கம் **40** வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் பொருத்தமான சேர்மானத்தைத் தெரிவுசெய்க.

| | | | | |
|---|---|---|---|---|
| A<br>திருப்புகழ் | B<br>நமசிவாய தேசிகர் | C<br>காங்கேயன் விக்கிரகம் | D<br>வண்ணை வைத்தீஸ்வரம் | E<br>சுந்தரனாகமம் |
| F<br>பறாளை விநாயகர் ஆலயம் | G<br>திருமூலர் | H<br>திருக்கைலாய பரம்பரை | I<br>மதுங்க சூளாமணி | J<br>கல்வளை அந்தாதி |

**36.** நகுலேஸ்வர ஆலயத்துடன் தொடர்புடைய சோடி
(1) AB (2) AC (3) BC (4) BG (5) BH

**37.** திருவாவடுதுறை ஆதீனத்துடன் தொடர்புடைய சோடி
(1) AI (2) AJ (3) BH (4) BI (5) BJ

**38.** ஒல்லாந்தர் காலத்தில் நிலவிய இந்து சமயத்துடன் தொடர்புடைய சோடி
(1) BF (2) DI (3) EJ (4) FI (5) FJ

**39.** திருமந்திரத்துடன் தொடர்புடைய சோடி
(1) BD (2) DI (3) EG (4) FG (5) FI

**40.** சுவாமி விபுலாநந்தருடன் தொடர்புடைய சோடி
(1) AB (2) DI (3) EG (4) EI (5) FG

- **41** தொடக்கம் **50** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் தலைப்புக்கு மிகப் பொருத்தமானதைத் தெரிவு செய்க.

**41. சங்கர வேதாந்தத்தின் முக்கிய கோட்பாடு**

(1) மாயையால் உலகம் தோன்றுவது (2) ஜீவாத்மாக்கள் பந்தப்பட்டவை
(3) பிரமமே உண்மைப் பொருள் (4) ஈஸ்வரன் படைப்புக் கடவுள்
(5) ஞானமே விடுதலைக்கு வழி

**42. சேயோன் மேய மைவரை உலகமும்**

(1) சங்க இலக்கியங்களில் முருகன் போற்றப்பட்டார்.
(2) முருகன் கொற்றவையின் மகன் எனக் குறிக்கப்படுகின்றார்.
(3) முருகக் கடவுள் சேயோன் என அழைக்கப்படுகின்றார்.
(4) பண்டைத் தமிழகத்தில் முருகன் முக்கிய கடவுள் ஆவார்.
(5) குறிஞ்சி நிலத்துக்குரிய கடவுளாக முருகன் வழிபடப்பட்டார்.

[பக். 6 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka, Department of Examinations Sri Lanka,

**43. கோயிற் கிரியைகள்**
(1) ஆகமங்களை அடிப்படையாகக் கொண்டவை.
(2) ஆன்மார்த்தம், பரார்த்தம் என இருவகைப்படும்.
(3) திருவுருவங்களை அடிப்படையாகக் கொண்டவை.
(4) அனைத்து மக்களின் ஆன்ம ஈடேற்றம் கருதிச் செய்யப்படுபவை.
(5) கர்ஷனம், பிரதிஷ்டை, உற்சவம், பிராயச்சித்தம் என நால்வகைப்படும்.

**44. விசிட்டாத்வைதம்**
(1) ஒன்றிலிருந்து ஒன்றைப் பிரிக்க முடியாது என்பதைக் கூறுவது
(2) விசேடன விசேடியங்களுடன் தொடர்புடையது
(3) ஈஸ்வர பரிணாம வாதத்தை ஏற்றுக்கொள்வது
(4) சரீர சரீரி தொடர்பைக் கொண்டு விளங்குவது
(5) முப்பிரமாணங்களை ஏற்றுக்கொள்வது

**45. நகுலேஸ்வரம்**
(1) புராதன சிவாலயங்களில் ஒன்றாகும்.
(2) 'திருத்தம்பலேஸ்வரம்' என அழைக்கப்படுகின்றது.
(3) இலங்கையில் வடக்கே கீரிமலையில் அமைந்துள்ளது.
(4) ஆடி அமாவாசையன்று பிதிர்க்கடன் செய்யும் புனித இடமாகும்.
(5) நகுலமுனிவர் தவம் செய்து கீரிமுகம் நீங்கப்பெற்ற தலமாகும்.

**46. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் சமூகப் பணி**
(1) அகராதிகளைப் பதிப்பித்தமை
(2) கதாப்பிரசங்கங்கள் செய்தமை
(3) சைவ தூஷண பரிகார வெளியீடுகள்
(4) கஞ்சித்தொட்டித் தருமம் மேற்கொண்டமை
(5) வித்தியாநுபாலன யந்திரசாலைகளை நிறுவியமை

**47. பக்தி யோகம்**
(1) பகவத்கீதையில் கூறப்படுவது
(2) மூவகை யோகங்களில் ஒன்று
(3) பக்தி, பிரபக்தி என இரு வகைப்படும்
(4) அன்பின் வழியில் இறைவனை அடைதல்
(5) திருத்தொண்டர்களிடத்தில் பக்தி செலுத்துதல்

**48. இந்து அறிவியல் மரபில் சுஸ்ருதர்**
(1) தன்வந்திரியின் சீடராவார்.
(2) சுஸ்ருத சம்ஹிதையின் ஆசிரியராவார்.
(3) அறுவைச் சிகிச்சை முறையின் தந்தையாவார்.
(4) ஆயுர்வேத மருத்துவத்தின் முன்னோடியாவார்.
(5) மனநல மருத்துவம் பற்றிச் சிந்தித்தவராவார்.

**49. ஈழத்தில் சோதிடக்கலை வரலாறு**
(1) பஞ்சாங்க முறையுடன் தொடர்புடையது.
(2) ஆரியச் சக்கரவர்த்திகளினால் வளமூட்டப்பட்டது.
(3) கேரள சோதிடக் கலையின் செல்வாக்குக்குட்பட்டது.
(4) சரசோதிமாலையை முன்னோடியாகக் கொண்டது.
(5) மக்களின் மங்கல, அமங்கல நிகழ்வுகளுடன் தொடர்புடையது.

**50. இந்து சமயத்தில் அறம்**
(1) இதிகாசங்கள் அறத்தை வலியுறுத்துகின்றன.
(2) தர்ம சாத்திரங்களில் யுகதர்மம் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.
(3) பகவத்கீதையில் விதிக்கப்பட்ட கடமைகளைச் செய்தல் அறமாகும்.
(4) வேதப் பாடல்களில் வர்ணன் அறக்கடவுளாகப் போற்றப்பட்டுள்ளான்.
(5) சமுதாய ஒழுங்கைப் பேணவும் நெறிப்படுத்தவும் கட்டமைக்கப்பட்டுள்ளது.

* * *

Department of Examinations Sri Lanka
Department of Examinations Sri Lanka

Department of Examinations Sri Lanka ,
Department of Examinations Sri Lanka ,

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2021 (2022)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2021 (2022)
General Certificate of Education (Adv. Level) Examination, 2021 (2022)

හින්දු ධර්මය II
**இந்து சமயம் II**
Hinduism II

**42 T II**

පැය තුනයි
***மூன்று மணித்தியாலம்***
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
**மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்**
Additional Reading Time - 10 minutes

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

**அறிவுறுத்தல்கள் :**

※ பகுதி **I** இலிருந்து எவையேனும் **இரண்டு** வினாக்களையும், பகுதி **II** இலிருந்து எவையேனும் **மூன்று** வினாக்களையும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

**1.** (அ) வேதம் என்பதன் பொருளைத் தருக. (2 புள்ளிகள்)

(ஆ) வேதத்தின் பகுதிகளைச் சுருக்கமாக அறிமுகம் செய்க. (4 புள்ளிகள்)

(இ) வேதங்களில் வெளிப்படும் தத்துவ சிந்தனைகளை சுருக்கமாக விவரிக்குக. (6 புள்ளிகள்)

(ஈ) வேதகால சமூகநிலை பற்றி விளக்குக. (8 புள்ளிகள்)

**2.** (அ) பொலநறுவைக் காலத்தில் இந்து சமய வளர்ச்சிக்குப் பங்காற்றிய மன்னர்கள் **இருவரின்** பெயர்களைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

(ஆ) பொலநறுவைக் காலத்துக்குரிய சிவாலயங்கள் **நான்கினைத்** தருக. (4 புள்ளிகள்)

(இ) பொலநறுவைக் காலத்து வெண்கலப் படிமங்கள் பற்றிச் சுருக்கமாக விவரிக்குக. (6 புள்ளிகள்)

(ஈ) பொலநறுவைக் காலத்தில் சைவ சமயம் வளர்ச்சி பெற்றவாற்றை விளக்குக. (8 புள்ளிகள்)

**3.** (அ) பண்டிகை என்பதன் பொருள் யாது? (2 புள்ளிகள்)

(ஆ) சித்திரைப் புத்தாண்டில் இடம்பெறும் ஆசாரங்கள் **நான்கினைக்** குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

(இ) தைப்பொங்கல் பண்டிகை கொண்டாடப்படும் முறையினைச் சுருக்கமாக விவரிக்குக. (6 புள்ளிகள்)

(ஈ) பண்டிகைகள் வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிப்படுத்துமாற்றை விளக்குக. (8 புள்ளிகள்)

[பக். 2 ஐப் பார்க்க

## பகுதி II

**4.** மத்துவரின் துவைத வேதாந்தக் கொள்கையினை மேல்வரும் தலைப்புகளில் விளக்குக.

(அ) துவைதம் - சொற்பொருள் விளக்கம் (2 புள்ளிகள்)

(ஆ) ஈஸ்வரன் (6 புள்ளிகள்)

(இ) சீவன் (6 புள்ளிகள்)

(ஈ) விடுதலையும் அதற்கான வழிகளும் (6 புள்ளிகள்)

**5.** இந்துசமய வரலாற்றில் ஆகமங்கள் பெறும் முக்கியத்துவத்தினை மேல்வருவனவற்றின் அடிப்படையில் விளக்குக.

(அ) ஆகமம் - பொருள் விளக்கம் (3 புள்ளிகள்)

(ஆ) ஆகமம் கூறும் ஆலய அமைப்பு (4 புள்ளிகள்)

(இ) ஆகமம் கூறும் ஆலயக் கிரியைகள் (5 புள்ளிகள்)

(ஈ) இந்துப் பண்பாட்டில் ஆகமங்கள் (8 புள்ளிகள்)

**6.** சைவசித்தாந்த தத்துவத்தினை அடிப்படையாகக் கொண்டு மேல்வருவனவற்றை விளக்குக.

(அ) ஆன்ம இருப்பு

(ஆ) ஆன்மாவின் இயல்புகள்

(இ) சைவநாற்பாதங்கள்

(ஈ) முத்தி (5 × 4 = 20 புள்ளிகள்)

**7.** இந்து ஆன்மிக மரபில் மேல்வருவன பெறும் இடத்தினை விளக்குக.

(அ) புருடார்த்தங்கள்

(ஆ) ஆச்சிரமதர்மங்கள் (10 × 2 = 20 புள்ளிகள்)

**8.** இந்துக் கலைகளுள் மேல்வருவனவற்றின் சிறப்பியல்புகளை விளக்குக.

(அ) பண்ணிசை

(ஆ) விக்கிரகக்கலை (10 × 2 = 20 புள்ளிகள்)

* * *

Department of Examinations Sri Lanka
Department of Examinations Sri Lanka